දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.
අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister — 2784832, 2784807, 2785617
ලේකම් / செயலாளர் / Secretary — 2784812
කාර්යාලය / அலுவலகம் / Office — 2785141-50, Fax: 2784846
ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk
ඔබේ අංකය / உமது இல. / Your No. ……………………

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education
"ඉසුරුපාය" බත්තරමුල්ල.
"இசுருபாயா" பத்தரமுல்ல.
"Isurupaya" Battaramulla.
මගේ අංකය / எமது இல. / My No. ……………………
දිනය / திகதி / Date 2016.06. 08

சுற்றுநிருப இலக்கம் - 20/2016

சகல மாகாண கல்விச் செயலாளர்கள்
சகல மாகாண கல்விப் பணிப்பாளர்கள்
உரிய பாடசாலை அதிபர்கள்

## க.பொ.த (உ/த) தொழினுட்பவியல் பாடத்துறை ஆரம்பித்தல்

தொழினுட்பவியல் பாடத்துறையை க.பொ.த உயர்தர வகுப்புக்கு அறிமுகப்படுத்துவதன் முக்கிய நோக்கம் கோட்பாட்டு ரீதியான அறிவைப் போன்றே பிரயோக ரீதியாகவும் அறிவு நிரம்பிய, எதிர்கால வேலை உலகிற்குப் பிரவேசிக்கும் தேர்ச்சியுடையவர்களை பாடசாலை மூலம் உருவாக்குவதாகும்.

இங்கு முதற்கட்ட பாடத்துறையினை நடைமுறைப்படுத்துவதற்காக பாடசாலைகளைத் தெரிவுசெய்யப்பட்ட நியதிகள்

- அபிவிருத்தியடைகின்ற 1000 இடைநிலைப் பாடசாலைகளுக்கிடையில் மாத்திரம் தெரிவு செய்யப்பட்ட பாடசாலையாக இருப்பது
- ஆரம்பப்பிரிவு நீக்கப்பட்ட பாடசாலையாக இருப்பது
- தொழினுட்ப கூடமொன்று அனுமதிக்கப்பட்ட பாடசாலையாக இருப்பது

மேற்படி நியதிகளுக்கு மேலதிகமாக இந்தப் பாடத்துறையினை முறையான மேற்பார்வையுடன் விரிவு படுத்துவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. அதன்பிரகாரம் ஏதாவதொரு தேசிய பாடசாலையில் க.பொ.த உயர்தர வகுப்பு தொழினுட்பவியல் பாடத்துறையை ஆரம்பிப்பதாயின் கல்வி அமைச்சின் கட்டமைப்புக் குழுவின் அனுமதியைப் பெற்ற பின்னர் மாத்திரம் க.பொ.த உயர்தர வகுப்பு தொழினுட்பவியல் பாடத்துறையை ஆரம்பிக்கவும், மாகாண பாடசாலைகளுக்கு மாகாண கட்டமைப்புக் குழுவின் அனுமதியுடன் மாத்திரம் பாடத்துறையினை ஆரம்பிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். கட்டமைப்புக் குழுவின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படும் மாதிரி விண்ணப்பப்படிவம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 1) இவ்விதத்தில் பாடசாலைகளை அனுமதிக்கும் போது பின்வரும் விதத்தில் செயற்படல் வேண்டும்.

01. உரிய பிரதேச செயலகப் பிரிவினுள் தற்பொழுது க.பொ.த உயர்தர தொழினுட்பவியல் பாடத்துறை நடைபெறுகின்ற பாடசாலைகள் மற்றும் புதிதாக பாடத்துறை ஆரம்பிப்பதற்கு உத்தேசித்துள்ள பாடசாலைகளினதும் பூகோள அமைவிடத்தை அடிப்படையாகக் கொண்டு, புதிதாக பாடத்துறை ஆரம்பிப்பதற்குப் பொருத்தமான பாடசாலைகளைத் தெரிவுசெய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(தொழினுட்ப பீடங்களுக்கிடையிலான தூரத்தை அடிப்படையாகக் கொள்ளல்)

02. தொழினுட்பவியல் பாடத்துறையைத் தொடர்வதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ள பாடசாலைகளுக்கான கேள்வி மற்றும் போசணைப் பிரதேச பாடசாலைகளுக்கான மாணவர் கேள்வியை அடிப்படையாகக் கொண்டு உரிய பாடசாலைகளில் பாடத்துறையை ஆரம்பிப்பதற்காக விண்ணப்பித்தல் வேண்டும்.

03. பாடத்துறைகளுக்கான பிரயோக செயற்பாடுகளுக்கு வசதிகள் வழங்கும்பொருட்டு, தொழினுட்ப பீடம் நிர்மாணிப்பதற்கான நிதி வசதி தொடர்பாக நிரல் அமைச்சினது அல்லது மாகாண கல்வித் திணைக்களத்தினது இணக்கப்பாட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

04. மாகாண பாடசாலைகளுக்காக நிரல் அமைச்சினால் வழங்கப்படுகின்ற நியதிகளின் பேரில் தொழினுட்ப பீடம் நிறுவுதல் மற்றும் பாட உபகரணங்கள் வழங்குதல் உரிய முறைப்படி மாகாணத்தின் மூலம் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

05. உரிய பாடங்களைக் கற்பிப்பதற்காக முறைமையினுள் தற்பொழுது இருக்கின்ற தகைமை உடைய ஆசிரியர்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

06. மேற்படி நியதிகளின் அடிப்படையில் ஒரு பாடசாலையில் க.பொ.த உயர்தர தொழினுட்பவியல் பாடத்துறையினைத் தொடர்வதற்கு குறைந்தது 15 மாணவர்களாவது இருத்தல் வேண்டும்.

07. புதிய பாடத்துறையை ஆரம்பித்த பின்பு அதுபற்றி நிலையியல் கட்டளை இலக்கம் 50 மாதிரிப்படிவத்தினூடாக உரியவர்களுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

08. தொழினுட்ப பாடத்துறை பிரயோக பயிற்சியுடன் கூடிய பாடங்களை உள்ளடக்கியுள்ளதோடு க.பொ.த உயர்தரப் பரீட்சையின் போது பிரயோகப் பரீட்சைக்கு 25% புள்ளிகள் வழங்கப்படும். எனவே புதிய பாடசாலைகளில் தொழினுட்ப பாடத்துறையை அனுமதிக்கும் போது உரிய பிரயோகப் பயிற்சியை மேற்கொள்வதற்கு விஷேட கவனம் செலுத்தி செயற்படுத்தல் வேண்டும்.

மேற்குறித்த விதத்திற்குப் புறம்பாக க.பொ.த உயர்தர வகுப்பு தொழினுட்பவியல் பாடத்துறையை ஒரு பாடசாலையில் ஆரம்பிப்பதற்கான வேண்டுகோளை கல்வி அமைச்சுக்கு சமர்ப்பிக்கக்கூடாது. தற்போது பாடத்துறையை நடைமுறைப்படுத்துவதற்கு கட்டமைப்புக் குழுவின் அனுமதி வழங்கப்பட்டுள்ள சகல பாடசாலைகளினதும் பட்டியல் மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கும் உரிய பாடசாலைகளின் அதிபர்களுக்கும் அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை அறிவிக்கின்றேன்.

டப்ளியு.எம். பந்துசேன
செயலாளர்
கல்வி அமைச்சு

பிரதிகள்:

1. கல்வி அமைச்சின் சகல மேலதிகச் செயலாளர்கள்
2. பணிப்பாளர் நாயகம் - தேசிய கல்வி நிறுவகம்
3. கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
4. பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத் திணைக்களம்
5. பணிப்பாளர், பாடசாலை கட்டடங்கள், கல்வி அமைச்சு
6. கல்வி அமைச்சின் சகல விடயப் பணிப்பாளர்கள்

Attachment I

## Specimen Application

**Furnishing Information for starting of the GCE Advanced Level Technology Subject Stream in Accordance with Circular No. 2016/20**

01 Name and Address of School: ............................................................................................

02 Telephone No. : ....................................... Email Address: ..............................................

03 Province: ....................... Esucation Zone: ................................ D.S.Division: ...................

04 Name of Principal: ..................................................................................................

05 Facilities available for starting the relevant subject stream:

(1) Human Resources

| Subject | Name of Teacher | Qualifications | Telephone No. |
|---|---|---|---|
| Engineering Technology | | | |
| Bio Systems Technology | | | |
| Science for Technology | | | |

(II) Physical resources for practical training

| Subject | Hall Facilities (Area) | Equipment |
|---|---|---|
| Engineering Technology | | Attach list. |
| Bio Systems Technology | | Attach list. |
| Science for Technology | | Attach list. |

If students are expected to be directed to a Faculty of Technology in a neighbouring school due to lack of facilities (Hall and equipment), particulars on the method of transporting the students safely to and from the Faculty, and means of covering the transport expenses must be submitted along with a letter of consent to provide facilities from the Principal of the Faculty.

06 Number of students: Year: ..................................

| Subject | Number of Students | | |
|---|---|---|---|
| | Boys | Girls | Total |
| Engineering Technology | | | |
| Bio Systems Technology | | | |
| Science for Technology | | | |

Principal's Signature: ..................................................

Rubber Stamp:

Date: .........................................